பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 23 | சனிக்கிழமை | 06.07.2024 | அதிர்வு 340


## வேலணை கடற்கரையில் மீனவர் ஒருவரின் சடலம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வேலணை கடற்கரையில் மீனவர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 06▶







### தந்தை செல்வா, தேசியத் தலைவர் பிரபாகரன் வரிசையில்

# தனி மனிதத் தலைமைத்துவ சகாப்தத்தில் கடைசித் தலைவராக சம்பந்தன் மிளிர்வார்

### இனி கூட்டுத் தலைமையே அமையும் என்கிறார் சி.வி.கே.

(எஸ்.நிதர்ஷன்)

“தலைசிறந்த தலைவனுக்கு சிரம் தாழ்த்தியஅஞ்சலிகள்!”என்றுமறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பிக்குப் புகழாரம் சூட்டியிருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம். 06▶



## ஜனாதிபதித் தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளேன்

### ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தேன் என்று இலங்கை ராமன்ய நிகாயவின் மகாநாயக்க வண. மகுலேவே விமல நாயக்க தேரரிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். 07▶




‘கெடுவான் கேடு நினைப்பான்’. அவனைத் திருத்த முடியாது.

அதுபோலவே ‘கெடுகுடி சொற்கேளாது’ என்பர்.

குடாநாட்டில் அச்சு ஊடகம் ஒன்றின் கேவலச் செயற் போக்குக் குறித்து எனது இந்தப் பத்தியில் நேற்றுப் பிரஸ்தாபித்திருந்தேன். உள்நாட்டிலும், தேசிய ரீதியிலும் மட்டுமல்லாமல், புலம்பெயர் தேசமெங்கும் அது ஏற்படுத்தியிருக்கும் அதிர்வலைகளின் தாக்கத்தை சம்பந்தப்பட்டஎள் எண்ணைப் பத்திரிகையும், அதன் முதலாளியும், அவரின் ஊடக எடுபிடிகளும் புரிந்து கொண்டனரோ தெரியவில்லை.

நேற்று முன்தினம் தான் காட்டிய அதே வக்கிரத்தை, நேற்றுப் பத்தி மற்றும் ஆசிரியர் கருத்துரை ஊடாக குசும்புத்தனமாகக் காட்டும் போக்கை அது கைவிடாமல் தொடர்ந்தது.

இதேபோக்கை அது தொடர்ந்து கடைபிடிக்குமானால், அதை விரைந்து வீழ்த்த 06▶




# ஆளுநர்களின் சட்டவிரோதமான நியமனங்களை இரத்து செய்ய வேண்டுமென கபே வலியுறுத்தல்

மாகாண ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கபே அமைப்பு, தேர்தல் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் விசேட கடித மொன்றை தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேற்று வெள்ளிக் கிழமை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

“கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் ஆளுநர்கள் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மேயர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக இணைப்பாளர் பதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனூடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்களைப் பாவிப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டிருப்பதன் ஊடாக தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அரச சொத்து துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்து தேர்தல் தினம் குறிப்பிடப்படாமல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுவது சட்டவிரோதமாகும்.

அதேபோன்று இந்த நியமனத்தின் ஊடாக அரச சொத்துக்கள் பாவிக்கப்படுவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடாகும் என்பதையும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

இதேநேரம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர் வசமே காணப்படுவதனால் இவ்வாறு அரச சொத்து துஷ்பிரயோகத்துக்கு துணை போகக்கூடிய அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# கோழியின் கல்லீரலைச் சுத்தம் செய்யாமல் சமைத்த சமையல்காரருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

## மட்டு நகர் ஹோட்டல் தொடர்பில் நீதிமன்றம் உத்தரவு

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் கோழிபாட்ஸ் கறியில் கல்லீரலை சுத்தம் செய்யாது மண்ணுடன் வழங்கிய ஹோட்டல் சமையல்பகுதி பொறுப்பாளரை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

இந்த ஹோட்டலில் கடந்த மாதம் 25 ஆம் திகதி சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த ஒருவர் கோழிபாட்ஸ் கறியை வாங்கிச் சென்று அதனை சாப்பிட எடுத்தபோது, அதில் கோழியின் கல்லீரல் பகுதியை வெட்டிச் சுத்தம் செய்யாது மண்ணுடன் அப்படியே கறி சமைத்து வழங்கப்பட்டுள்ளது தெரிய வந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்டவர் அந்த ஹோட்டலுக்குக் கறியுடன் சென்று, கறியில் மண்ணுள்ளமை தொடர்பாக தெரிவித்து, பின்னர் அதனைப் பொது சுகாதார அதிகாரிகளிடம் சென்று வழங்கி, ஹோட்டலுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக அந்த ஹோட்டல் சமையல் பகுதிப் பொறுப்பாளர் பொது சுகாதார பணிமனைக்கு அழைக்கப்பட்டு, விசாரணையின் பின்னர் அவருக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார அதிகாரிகள் வழக்கு தாக்குதல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிவான் ஹோட்டல் சமையல் பகுதிப் பொறுப்பாளரைத் தண்டப்பணமாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# இளைஞர்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்காமல் கல்விசாரா ஊழியர்கள் பணிக்கு திரும்ப வேண்டும்

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவிப்பு



நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், அவர்களின் காலத்தை வீணடிக்காமல், அனைத்துப் பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்களையும் கடமைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்."

– இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 ஒன்றிணைந்த பட்டப்பின்படிப்பு நிறுவனங்களின் 14,600 கல்விசாரா ஊழியர்கள் 65 நாள்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் முழு உயர்கல்வித்துறையும் முடங்கியுள்ளது. இந்நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவிருக்கும் 250,000 இளைஞர்களின் வாழ்க்கை சீர்குலைந்து, அவர்களின் காலத்தை வீணடிப்பதுதான் இதன் துயரமான பிரதிபலனாகும்.

2019 இல் கொவிட் தொற்று, 2020 இல் பொருளாதார நெருக்கடி, 2021 இல் போராட்டம் போன்றவற்றால் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்கள், அந்த சவால்களையெல்லாம் எதிர்கொண்டு, பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வீதமானோரில் உள்ளடங்கினாலும் கூட, இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் அவர்கள் மேலும் குழப்பமடைந்திருப்பது மிகப் பெரும் துயரம் என்றே கூற வேண்டும்.

நான் இன்று இந்த நிலைமைக்கு வந்திருப்பது கல்வியினால்தான் அன்றி வேறு எந்த காரணத்தினாலும் அல்ல. கல்வியின் பெறுமதியை அறிந்த நான் இங்கு இருக்கும் போதும், நாட்டின் பல்கலைகழகங்கள் மூடப்பட்டுள்ளமையிட்டு மிகவும் வருந்துகிறேன். அவர்கள் கோரிய சம்பள உயர்வுக்கு திறைசேரி சம்மதிக்காத காரணம், இவர்களைத் தொடர்ந்து மேலும் பல்வேறு நிறுவனங்களும் சம்பள உயர்வு கோரியிருக்கிறது. எவ்வாறாயினும், இந்த கோரிக்கைகளை பரிசீலித்து 2025 வரவு – செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படும் என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த நாடகத்தின் பின்னணியில் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியே வந்துள்ளது. 2010ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தமது சம்பளத்தை அதிகரித்துள்ள இவர்கள், கல்வி சாரா ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முயற்சித்து வரும் நிலையில், பல்வேறு நிபந்தனைகளுடன் கடிதம் அனுப்பி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பல்கலைக்கழகத்தின் பணத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று அவர்களின் இறுதிக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர். அவர்களால் எப்படி இவ்வாறு நிபந்தனை விதிக்க முடியும்? பல்கலைக்கழகங்கள் பொது மக்களின் வரிப்பணத்தால் செயற்படும் நிறுவனங்களே அன்றி, அவர்களின் சொத்து அல்ல. பல்கலைக்கழகங்கள் அதன் விரிவுரையாளர்களின் மாஃபியாவின் கீழ் வருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கல்வியைக் கட்டியெழுப்பி, மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அவர்களின் தொழில்துறை நோக்கமாக இருக்க வேண்டும்.

கல்வி சாரா ஊழியர்களின் இந்தக் கோரிக்கைகள் நியாயமானவை. அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, உதய செனவிரத்ன குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடாக 2025 வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என உறுதியளிக்கிறேன். மேலும், அவர்களின் இரண்டு மாத சம்பளம் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பணிக்கு சமுகமளிக்காத நாள்களை விடுமுறை நாள்களாகக் கருதி, தண்டனை ஏதுமின்றிப் பணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல் அவர்களின் காலத்தை வீணடிக்காமல் பணிக்கு சமூகமளிக்குமாறு அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

# இலங்கைக்குள் ஊடுருவிய இலங்கையைச் சேர்ந்த இரண்டு மீனவர்களுக்கும் தனியான வழக்கு தாக்கல்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்கு ஊடுருவிய வேளை கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களில் இருவர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதனால் அவர்களுக்குத் தனியான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் கடந்த மாதம் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் மூன்று படகுகளுடன் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் – இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட இந்த 22 மீனவர்களில் இருவர் இலங்கையர் எனவும், இலங்கையில் இருந்து படகு வழியாகத் தமிழகத்துக்குச் தப்பிச் சென்று இராதேஸ்வரம் பகுதியில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்த சுப்பிரமணியம் தீபன், சுப்பிரமணியம் சுதாகர் ஆகிய சகோதரர்களே கைது செய்யப்பட்டனர்.

1997ஆம் ஆண்டு போர் உச்சம் பெற்ற சமயம் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்று முகாமில் வசிக்கும் இவர்கள், தினக் கூலிக்காகத் தமிழக மீனவர்கள் படகில் பணியாற்றிய சமயம் தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டு நேற்றைய தினத்துக்கு வழக்குத் திகதியிடப்பட்டது.

இதற்கமைய நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான்



நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் தமிழக மீனவர்கள் 20 பேரும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனவும், இரு இலங்கை மீனவர்களும் அனுமதியற்று மீன்பிடியில் ஈடுபட்டனர் எனவும் இரு குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் 18 ஆம் திகதி 22 மீனவர்களும் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டாலும் இலங்கையைச் சேர்ந்த இருவரும் தமிழகம் திரும்ப அனுமதிக்கப்படும் சூழல் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.



# மேல் மாகாணத்தில் காணி விலை வீழ்ச்சி

மேல் மாகாணத்தில் சராசரி காணி விலையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக சர்வதேச ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனமான ஆராய்ச்சி நுண்ணறிவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது சந்தை அவதானிப்புகளுக்கமைய, கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது சரிவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விசேடமாக கொழும்பு போன்ற நகரங்களில் நிலப்பற்றாக்குறை காரணமாகக் காணிகளின் பெறுமதிகள் அதிகரித்து வந்தன.

இலங்கையின் உள்நாட்டு மோதலின் போதும், கொழும்பில் காணி விலை தொடர்ந்து உயர்ந்த நிலையில் இருந்து வந்தன.

எனினும், இந்த ஆண்டின் முதல் காலாண்டில், மேல் மாகாண புறநகர்ப் பகுதிகளில் காணிகளின் சராசரிவிலை வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மறுசீரமைப்புகளால் தூண்டப்பட்ட பலதரப்பட்ட காரணிகள் இந்த சரிவுக்குப் பெரும்பாலும் காரணமாக இருக்கலாம் எனத் தொழில் துறை வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.





# உகந்தமலை முருகன் ஆலயத்தில் இன்று ஆடிவேல் விழா மகோற்சவம் ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று ஜுலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயக் கொடியேற்றம் ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்ன தானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், கதிர்காமத்துக்கான உகந்தைமலை ஊடான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியார் யாரும் வரத் தேவையில்லை. ஆசிரிய பீடத்தில் இருக்கும் தற்குறிகளே அந்தக் காரியத்தை செம்மையாக ஒப்பேற்றி முடிப்பர் என்பது திண்ணம்.

ஊடகத்தின் பெயரால் முதலாளியும், ஆசிரியர் பீடத் தற்குறிகளும் செய்யும் நட்டாமுட்டித்தனம் சமூக ஊடகங்கள் ஊடாகப் பரவி வரும் வேகத்தையும் அவற்றின் பிரதிபலிப்புகளையும் பார்க்கும்போது இனி வடக்கு அரசியலில் அந்த முதலாளிக்கும் அவரின் துதி பாடும் நாளிதழுக்கும் பங்காற்ற அதிக இடம் இல்லை என்பது தெளிவாகி – துலாம்பரமாகி – வருகின்றது.

அந்த ஊத்தைப் பத்திரிகையின் அடாவடித்தனம் முடிவுக்கு வர வேண்டும் என்று பிரார்த்தித்து, இந்து அமைப்புகளைச் சேர்ந்து ஒரு சிலர், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை ஒட்டி அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஒன்று கூடி, தேங்காய் அடித்து, கோஷமிட்டுப் பிரார்த்தித்தனர்.

இப்போதெல்லாம் தெய்வம் நின்று கொல்வதில்லை... அன்றே செய்து விடுகின்றதே......!

\+ + +

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள்தான். ஆகவே உரிய காலத்தில் தேர்தலை நடத்தி முடியுங்கள் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு பணித்துள்ளேன் என நேற்றும் ஜனாதிபதி கூறுகின்றார்.

(உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒன்றரை வருடங்களாகத் தடை போட்டு வைத்துக் கொண்டுதான் இந்தத் தத்துவத்தை அவர் உரைக்கின்றார்.)

ஆனால் அவரின் ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் ரங்க பண்டாரவோ நேற்று மதவாச்சியில் நடந்த கூட்டம் ஒன்றில் –

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களா அல்லது ஆறு வருடங்களா என்பதைத் தீர்மானிக்கக் கோரும் மனு ஒன்றை அமைச்சரவைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்திருக்கின்றார் என்றும், அந்தத் திட்டம் விரைவில் ஒரு சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறியிருக்கின்றார்.

இதனால் ஜனாதிபதி தேர்தல் எப்போது என்ற குழப்பம் – சஸ்பென்ஸ் – நீடிக்கிறது. எல்லாவற்றையும போட்டுக் குழப்பி அடித்து, அதில் தமக்கு வாய்ப்பைத் தேடிக் கொள்ளும் ரணிலின் நரி தந்திரத்திற்கு நிகர் எது?

## வேலணை கடற்கரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலணை, துறையூர் பகுதியைச் சேர்ந்த 46 வயதான மீனவரே கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் சுருவில் கடற்கரையில் நேற்று சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தனி மனிதத் தலைமை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

"தனது இளமைக் காலத்தில் இருந்தே தமிழையும், தமிழ் மண்ணையும், கலாசாரத்தையும், இன அடையாளத்தையும், பண்பாடுகளையும் இறுதி வரை நேசித்து ஓங்கி ஒலித்த திருமலை தந்த இராஜவரோதயம் சம்பந்தன் என்ற தமிழ்த் தேசிய இனத்தின் போராளியின் குரல் ஓய்ந்துவிட்டது.

இவரது இன விடுதலை வேட்கையையும் விடுதலைப் போராட்ட உணர்வையும் இனங்கண்ட தந்தை செல்வநாயகத்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஈர்க்கப்பட்டு இணைந்துகொண்டவர். இதனை ஒருமுறை தந்தை செல்வா நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோது மன நெகிழ்ச்சியோடு என்னுடன் பகிர்ந்து கொண்டமையையும் அவர் தந்தை செல்வாவின் மீது வைத்திருந்த அதீத பற்றையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இவ்வாறு தந்தை செல்வாவினால் தேடி அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டபோது சம்பந்தன் ஐயா திருமலையில் பெரும் வருமானம் ஈட்டும் சட்டத்தரணியாகச் சட்டத்துறையில் திகழ்ந்தவர்.

அவ்வாறான வருமானத்தை முழுமையாக கைவிட்டே 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டிலிருந்து இறுதி வரை திருமலையின் நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டமையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு எல்லோரையும் அரவணைத்துச் சென்றவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை 2001 ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை அதன் தலைவராகவும் அதன் பின்னர் அதன் பெருந் தலைவராகவும் செயற்பட்டவர். கட்சியில் அவரது இறுதி வார்த்தைகளுக்கு நாமெல்லோரும் கட்டுப்பட்டே இயங்கி வந்திருக்கின்றோம். கட்சிக் கூட்டம் எதுவாகினும் நடவடிக்கைகளை கவனிக்காதது போலக் காட்டி முழுமையாகக் கிரகித்து நிறைவுரை நிகழ்த்தும்போது எல்லோராலும் கூறப்படும் கருத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் பதிலளிக்கும் அவரின் நினைவாற்றல் அற்புதமானது.

ஈழத் தமிழினத்தின் தேசிய அடையாளத்தை நிலை நிறுத்துவதிலும், அதன் தன்மான, தன்னாட்சி உரிமையை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்காதவராகவே சம்பந்தன் ஐயா விளங்கினார். எல்லா நிகழ்வு மாற்றக் காலங்களிலும் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியமையுடன் அது சாத்தியப்படாது போனால் வெளியக சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகிப்போம் எனத் தெளிவாக கூறி வந்தவர்.

இவருடைய ஆற்றல், அறிவுடமை, அனுபவம், அரசியல் அணுகுமுறை காரணமாக தெற்கத்திய சிங்களத் தலைவர்களாலும், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியிலும் மதிக்கப்பட்டவர். அவ்வாறே சர்வதேச மட்டத்திலும் மதிக்கப்பட்டவர். பிற்காலத்தில் அவரது உடல் நிலை தளர்வடைந்த போதும் அவரது அற்புதமான நினைவாற்றல் தளரவே இல்லை.

தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையையும் கருத்துக்களையும் எவர் முன்னிலையிலும் மேசையிலே அடித்துக் கூறும் உதாரத்துக்கு அவர் உதாரணமாக விளங்கினார். இதனாலேயே பல்வேறு உயர் மட்டத்தினரும் அவரை வீடு தேடிச் சென்று சந்தித்தனர். பல்வேறு சூழ்நிலை மாற்றங்களின் போதும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையோடு செயற்பட்டவர்.

தத்தமது காலத்திலேயே தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று முயன்ற தமிழரசுத் தந்தை செல்வநாயகம், தேசியத் தலைவர் பிரபாகரன் வரிசையில் அமரர் சம்பந்தன் ஐயா அவர்களும் பதியப்படுவார்.

இதேநேரம் இந்த வரிசையில் உள்ள தனிமனித தலைமைத்துவ சகாப்தத்தின் முடிவாகவும் இது இருக்கும் என் நான் கருதுகிறேன்.

இதனைக் கருத்தில்கொண்டே சம்பந்தன் ஐயாவின் காலத்திலாவது இனப் பிரச்சினைக்கான தீர்வை நாம் காண வேண்டும் என அங்கலாய்த்து பிரார்த்தித்தவர்களில் ஒருவன் என்ற வகையில், அவரது கால முடிவில் இனி ஒரு தனி மனித தலைமை உருவாகாது என்பதையும் கூட்டுச் செயற்பாடு எற்படவேண்டும் எனில் அது ஒரு கூட்டுத் தலைமையே அமையும் என சில காலமாக நான் கூறி வந்திருக்கின்றேன்.

சம்பந்தன் ஐயா திருமலை காளியம்பாளில் மிகத் தீவிர நம்பிக்கை கொண்ட ஒருவர். அதனாலேயே தாம் சரியெனக் கருதியவற்றை எந்தக் கரவுகளுமின்றி வெளிப்படையாகவே கூறி வந்தவர்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்."

எனும் வள்ளுவர் வாக்குக்கு அமைய தமக்குச் சரியெனப்பட்டதை துணிந்து கூறி எம்மை வழி நடத்திய பெருந்தகை சம்பந்தன் ஐயா, எம் எல்லோரது உள்ளங்களில் நினைவு நிலையில் இருப்பார் என்பது திண்ணம்.

ஒரு தலைசிறந்த தலைமைக்கு எமது சிரம் தாழ்த்திய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா அவர் நித்தம் வணங்கும் காளி அம்பாளின் பாதார விந்தத்தில் அமைதி பெற பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## ஆறு. திருமுருகனுக்கு ஆதரவாகப் போராட்டம்




ஆறு. திருமுருகனுக்கு ஆதரவாகவும், ஊடக தர்மத்தை மீறிய யாழ். அச்சு ஊடகம் ஒன்றின் கேவலச் செயற்பாட்டுக்கு எதிராகவும் இந்து அமைப்புக் களைச் சேர்ந்த சிலர், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை ஒட்டி அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் நேற்று மாலை ஒன்று கூடி, தேங்காய் அடித்து, கோஷமிட்டுப் பிரார்த்தித்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலை உரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாரஹேன்பிட்டி, எல்விடிகல வீதியில் அமைந்துள்ள ஶ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயவின் தலைமையகத்துக்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி, இலங்கை ராமன்ய மகா நிகாயவின் மகாநாயக்க வண. மகுலேவே விமல மகாநாயக்க தேரரைச் சந்தித்து நலன் விசாரித்ததுடன், சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதன்போது, பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கிய தேரர், ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பாக நாங்கள் இப்போது தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் வர்த்தக கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலை முடித்துள்ளோம். நாங்கள் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 8 பில்லியன் டொலர்களை குறைக்க முடிந்துள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோன்று, கடனைச் செலுத்துவதற்கு 4 வருட கால அவகாசம் மற்றும் கடனை முழுமையாக செலுத்த 2043 வரை கால அவகாசம் பெறவும் முடிந்துள்ளது. இந்த நலன்களைப் பயன்படுத்தி இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அதற்காக, அடுத்த இரண்டு வருடங்களில் திட்டமிட்ட வகையில் செயற்பட்டால் மீண்டும் கடன் பெறாத நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்ல முடியும்.

பௌத்த நாடான தாய்லாந்து இன்று திறந்த பொருளாதாரத்தின் ஊடாக வலுவான பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளது. 1950 இல் தாய்லாந்து இலங்கையை விட இரண்டு மடங்கு கடனில் இருந்தது. ஆனால் இன்று, ஏற்றுமதியின் அடிப்படையில் சாதகமான பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

1991ஆம் ஆண்டு, வியட்நாமின் அன்றைய கைத்தொழில் அமைச்சர் இலங்கைக்கு கைத்தொழில்களையும் முதலீடுகளையும் கொண்டுவருவது பற்றி என்னிடம் கேட்டார். இன்று நான், கைத்தொழில்களையும் முதலீடுகளையும் கொண்டுவருவது தொடர்பாக வியட்நாமின் கைத்தொழில் அமைச்சரிடம் கேட்க வேண்டியுள்ளது.

உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்க நான் தான் பரிந்துரைத்தேன்.

இன்று இந்நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அதன்படி தற்போது அஸ்வெசும வேலைத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.” – என்றார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித் துறை மூலம் சவாரி?

இந்த நாட்டின் ஆட்சி முறைப் போக்குக் குறித்து ஈழத் தமிழர்களுக்கு நல்ல அனுபவம் - பட்டறிவு - உண்டு. நீதியைச் செய்யாமல் விடுவதற்கும், அநீதியை தந்திரமாக நடைமுறைப்படுத்தி கொண்டு செல்வதற்கும் எத்தகைய விதமான தந்திரோபாயங்களை எல்லாம் கொழும்பின் நிர்வாகக் கட்டமைப்பு முன்னெடுக்கும் என்ற அனுபவப்பாடம் தமிழர்களுக்கு ரொம்பவும் உண்டு.

நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பின் பல பிரிவுகளை நடைமுறைப்படுத்தவே மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்து, அதையே தேசிய கொள்கைப் போக்காகக் கடைபிடிக்கும் ஒரு விநோதமான - விபரீதமான - நீதித்துறை முறைமை இந்த இலங்கைத் தீவில் மட்டும்தான் உண்டு. உலகின் வேறு எங்கேயும் இப்படி அரசமைப்பையே ஒதுக்கி நடப்பதை 'சட்டத்தின் ஆட்சி' என்று அங்கீகரிக்கும் போக்குக் கிடையாது.

அதனால்தான் இலங்கையில் நீதித் துறையை ஈழத் தமிழர்கள் அடியோடு நம்பவில்லை.

யுத்த காலத்தில் தம் மீது இழைக்கப்பட்ட யுத்தக் கொடூரங்கள், போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குரூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை நீதித்துறை ஊடாக நியாயம் பெறுவதை மறுத்து, சர்வதேச நியமங்களுக்கும், பங்களிப்புக்கும் இடமளிக்கும் விசாரணைப் பொறிமுறையே கட்டாயமானது என்று தமிழர்கள் விடாப்பிடியாக வற்புறுத்தி - வலியுறுத்தி - நிற்பதும் அதனால் தான்.

பௌத்த - சிங்கள தேசத்தின் விசாரணை முறைமை மீது தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து, சிங்களத்தின் நீதித் துறையை ஈழத் தமிழர்கள் புறமொதுக்கி, நிராகரித்து நிற்பது வெளிப்படையானது.

பௌத்த - சிங்களப் பேரினவாத ஆட்சி பீடங்கள் தங்கள் ஆட்சியின் அதிகாரத்தைக் கொண்டு செலுத்துவதற்காக - நிலை நிறுத்துவதற்காக - நீதித்துறையை வளைத்துக் கையில் போட்டுக்கொண்டு, தமது கட்டுப்பாட்டில் வைத்து இயக்குகின்றன என்பது இந்நாட்டின் தமிழர்களின் கருத்தியலாக இருந்து வருகின்றது.

தமக்கு இக்கட்டான - கஷ்டமான - வேலையை நீதித்துறையை வளைத்து போட்டு, அதன் மூலம் செய்து முடிப்பதில் கொழும்பு ஆட்சி பீடங்கள் பெரும் கில்லாடிகள்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கடுமையான இந்திய அழுத்தத்துக்கு மத்தியில் வேறு வழியின்றி வடக்கு - கிழக்கை இணைக்கும் ஏற்பாட்டுக்குக் கொழும்பு இறங்கி வரவேண்டியிருந்தது.

அது தொடர்பான உடன்படிக்கை ஏற்பாடுகளின்படி, இணைந்திருக்கும் வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு கொழும்பால் இயலவில்லை. இராஜதந்திர அழுத்தங்கள் அவ்வளவு இறுக்கமாக இருந்தன.

கடைசியாகத் தான் தப்புவதற்கு அந்த வேலையை நீதிமன்றம் மூலம் முன்னெடுத்தது தென்னிலங்கைச் சிங்களம்.

நீதிமன்ற உத்தரவைக் காட்டி, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை இணைத்து வைத்திருக்கும் தனது கடப்பாட்டை தூக்கிக் கடாசி விட்டது கொழும்பு.

நீதிமன்ற உத்தரவு என்பதால் கொழும்பின் இந்த நடவடிக்கையை வாய் மூடிப் பார்த்திருக்க வேண்டிய கட்டாயம் புதுடெல்லிக்கு நேர்ந்தது.

தமிழர் விடயத்தில் நீதிமன்றத்தை முன்னிறுத்தித் தனது திட்டத்தை கூர் பார்த்த தென்னிலங்கை, அதே தந்திரத்தை இப்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போட வைக்கும் வேலைக்கும் செய்ய முயற்சிக்கின்றதோ என்ற சந்தேகம் இயல்பாகவே எழுகின்றது.

இதுவரை காலமும் அம்சடக்காக மௌனம் காத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்போது விவகாரம் நீதிமன்றத்திற்கு வந்திருக்கும் சமயத்தில், உரிய காலத்தில் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணைக்குழுவைத் தான் பணித்துள்ளார் என்றும், ஐந்து வருடங்கள்தான் ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் என்றெல்லாம் உபதேசங்களைச் செய்கின்றார். அதைப் பார்க்கும்போது தனது ஜனாதிபதிப் பதவி நீடிப்பை நீதிமன்றம் ஊடாகவே ஒப்பேற்றி முடிக்க அவர் வியூகம் வகுத்துவிட்டாரோ என்ற சந்தேகம்தான் எழுகின்றது.

இலங்கையின் நீதித்துறையும், நீதியின் அச்சாணியில் நேர்மையாக சுழலவில்லை என்ற அதன் கடந்த கால பெருமையினால், இச்சந்தேகத்திற்கு உட்படும் அம்சமாகவே அதுவும் உள்ளது.




# திருச்சி முகாமில் இலங்கை அகதியிடம் லஞ்சம் பெற முயன்ற தமிழக அதிகாரி

தமிழகத்தின் திருச்சியிலுள்ள இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் வசிப்பவர்களிடம் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் சிறப்புக் பொலிஸ் உதவி ஆய்வாளர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திருச்சி சுப்பிரமணியபுரம் கொட்டப்பட்டு பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் உள்ளவர்கள் பணி நிமித்தமாக வெளியே செல்லும்போது அதற்கான காரணங்களை அங்குள்ள பதிவேட்டில் பதிவிட வேண்டும்.

இதனை கண்காணிப்பதற்காக அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் அங்கு மேற்பார்வை செயற்பாடுகளில் ஈடுபடும் கே.கே. நகர் பொலிஸ் நிலையச் சிறப்பு உதவி ஆய்வாளர் இலங்கை தமிழர்களிடம் லஞ்சம் கோரியுள்ள தாக முறைப்பாடு எழுந்துள்ளது.

இதனடிப்படையில், அவருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அவருக்கு எதிரான குற்றச்சாட்டில் முகாந்திரம் இருப்பதனால் அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் விஜயகாந்த்: அறிக்கை வெளியிட்டுள்ள தே.மு.தி.க



ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடிகர் விஜயகாந்தை மீண்டும் திரையில் தோன்ற வைக்க முயற்சிப்பது தொடர்பில் தே.மு.தி.க. அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழ் திரை உலகை சேர்ந்த அனைவருக்கும் அன்பான வேண்டுகோள், விஜயகாந்தை ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக தொடர்ந்து செய்திகள் வருகிறன.

எனவே இதுபோன்ற செய்திகள் இசை வெளியீட்டு விழாவில் வருகின்றது. எங்களிடம் முன் அனுமதியில்லாமல் இது மாதிரியான அறிவிப்புகள் வருவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். எந்த விதத்தில் பயன்படுத்துவதாக இருந்தாலும் முறையாக அனுமதி பெற்ற பின்பே, அறிவிப்பை வெளியிட வேண்டும்.

ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக இதுவரை யாரும் எந்த அனுமதியும் பெறவில்லை என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே அனுமதியில்லாமல் பத்திரிகை செய்திகள், ஊடக செய்திகள், ஆடியோ வெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.” என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் யார்?



பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் 14 வருடங்களுக்கு பிறகு மீண்டும் தொழிற்கட்சி ஆட்சியமைத்துள்ள நிலையில், கெய்ர் ஸ்டார்மர் பிரதமராகியுள்ளார்.

இடதுசாரி கட்சியான தொழிலாளர் கட்சி மொத்தம் 650 இடங்களில் 408 இடங்களில் வெற்றி பெற்று 14 வருடங்கள் பிறகு மீண்டும் ஆட்சியமைக்க உள்ளது.

இந்நிலையில், புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

கெய்ர் ஸ்டார்மர் தனது இளமைப் பருவத்தில் ப்ளூட், பியானோ, வயலின் உள்ளிட்ட இசைக்கருவிகளை வாசிக்



கும் இசைக்கலைஞராக இருந்துள்ளார்.

61 வயதாகும் இவர், தனது இளம் வயதிலேயே சோசலிச கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தனது 16 வயதில் தொழிலாளர் கட்சியின் இளம் சோசியலிஸ்ட் கூட்டமைப்பில் உறுப்பினரானார்.

லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றுள்ளதோடு ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு பயின்றார். 1987 ஆம் ஆண்டு பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞரான இவர், மனித உரிமைகளில் நிபுணத்துவம் பெற்றார்.

மேலும், ஆபிரிக்கா, கரீபியன் ஆகிய பிராந்தியங்களில் உள்ள தூக்குத்தண்டனை கைதிகளுக்காக வாதாடியுள்ளார். 1990 களில் மெக் லைப்ல் என்ற நிறுவனம் சுற்றுசூழல் முறைகேடுகளில் ஈடுபட்டதை எதிர்த்தவர்களுக்காக வாதாடியுள்ளார்.





பின்னர் 2008 ஆம் ஆண்டு பிரிட்டன் மற்றும் வேல்ஸ் அரசு வழக்கறிங்கர்களுக்கான இயக்குனர் பதவியில் அமர்ந்தார். அதனைதொடர்ந்து 2015 ஆம் ஆண்டிலே அவரின் முழுமையான அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு லண்டலில் உள்ள ஹோல்பார்ன் மற்றும் செயிண்ட் பான்க்ராஸ் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

தொழிலாளர் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெரமி கார்பினுக்கு மிகவும் நெருக்கமானவராக கெய்ர் இருந்த ஸ்டார்மர் கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சி தோல்வியடைந்த நிலையில் அக்கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

கெய்ரின் வெற்றியுடன் தொழிலாளர் கட்சியின் புதிய சகாப்தம் தொடங்கியது. கடந்த 2020 ஆம் ஆண்டு பிரெக்ஸிட் என்ற திட்டத்தின் மூலம் பிரிட்டன் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறியது.

ஆனால் அதற்கு எதிரிய நிலைப்பாட்டை கொண்டவர் கெய்ர், கடந்த 2014 ஆம் ஆண்டு சட்டத்துறையில் ஆற்றிய பணிகளுக்காக இரண்டாம் எலிசபெத் மகாராணியிடன் கிநைட்ஹுட் மற்றும் சர் பட்டம் பெற்றார்.

கெய்ர் ஸ்டார்மர் எப்போதும் தான் ஒரு உழைப்பாளி வர்க்கப் பின்னணி கொண்ட நபர் என்று கூறிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பிரித்தானிய பொதுத் தேர்தலில் தொழில் கட்சி சார்பாக வெற்றி பெற்றுள்ள கெய்ர் ஸ்டார்மர் பிரித்தானியப் பாரம்பரிய முறைக்கு அமைய மன்னர் சாள்ஸ்ஸை சந்தித்து தமது வெற்றியை அறிவித்துள்ளார்.

பெக்கிங்ஹாம் மாளிகையில் மன்னரைச் சந்தித்து விட்டு கெய்ர் ஸ்டார்மர் நேரடியாகப் பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான இலக்கம் 10 டௌனிங் வீதிக்குச் சென்றுள்ளார். அங்குச் சென்ற அவர் பிரதமராகத் தனது முதலாவது உரையினை நிகழ்த்தினார்.

நாம் மேற்கொள்ள வேண்டிய அவசரப் பணிகள் பல உள்ளன, அவற்றை இன்றே ஆரம்பிப்போம் என ஆதரவாளர்களின் கரகோஷத்திற்கு இடையே தெரிவித்தார்.

அவரது உரையைக் கேட்பதற்காக, சீரகோான காலநிலையிலும் பெருமளவான மக்கள் அங்குக் கூடியிருந்தனர்.

# அட்லாண்டிக்கில் படகு கவிழ்ந்து விபத்து: 89 குடியேற்றவாசிகளின் சடலங்கள் மீட்பு



அட்லாண்டிக் சமுத்திரத்தில் 170 குடியேற்றவாசிகளுடன் பயணித்த படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 89 பேரின் சடல்களை மீட்டுள்ளதாக மொரெட்டேனியாவின் கரையோர காவல்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில், ஐந்து வயது சிறுமி உட்பட 9 பேரை உயிருடன் மீட்டுள்ளதாகவும் மொரெட்டேனியாவின் கரையோர காவல்படை தெரிவித்துள்ளது.

செனெகல் கம்பியா எல்லையிலிருந்து 170 பேருடன் பயணித்த படகொன்றே இவ்வாறு, மொரெட்டேனியாவின் தென்மேற்கு கடலோரப் பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பா செல்ல முயலும் குடியேற்றவாசிகளிற்கான பிரதான இடைத்தங்கல் நாடாக மொரெட்டேனியா காணப்படுகின்றது.

குடியேற்றவாசிகளுடன் ஆயிரக்கணக்கான படகுகள் இந்த பகுதியிலிருந்து பயணிக்கின்றன என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபத்தான இந்த பாதையில் பயணிக்கும் படகுகள் ஸ்பெயினின் கனரி தீவுகளை நோக்கி செல்வதாக குறிப்பிடப்படுகின்றது



# பிரித்தானியத் தேர்தலில் ஈழத்தமிழ் பெண் சாதனை

பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்ட உமா குமரன், ஸ்ராட்போட் மற்றும் பௌவ் தொகுதியில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொழிற்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில், உமா குமரன் தன்னுடன் போட்டியிட்ட வேட்பாளர்களை விட பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். தமது தொகுதியில் அவர் 44.1 வீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தன்னை எதிர்த்துப்போட்டியிட்ட அனைவரையும் முந்தி அதிகூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார்.

ஈழத்தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினராக இவர் தெரிவாகியுள்ள நிலையில் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.



# வருமான வரி செலுத்தக் கோரி குறுந்தகவல் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் விளக்கம்

மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் குறைந்த வருமானம் பெறுகின்ற எவரும் வருமான வரி செலுத்தத் தேவையில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய விளக்கமளித்துள்ளார்.

வருமான வரி அடையாளக் குறியீட்டு எண்ணான "டின்" இலக்கத்தை குறிப்பிட்டு வருமான வரியைச் செலுத்துமாறு பலருக்கு மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல்கள் இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விளக்கமளித்துள்ள இராஜாங்க அமைச்சர், மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டாதவர்கள், இந்தத் தகவல் குறித்து அவதானம் செலுத்த தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் பெறுகின்றவர்கள், தங்களது வருமான வரியை உரிய கணக்கிற்குச் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் குறைவடையா!

பாண் மற்றும் வெதுப்பக உற்பத்தி உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

மூலப்பொருள்களின் விலை அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், எரிவாயு விலையை குறைப்பதால் மட்டுமே, வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.




# கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் 8 பில்லியன் டொலர் நிவாரணம் கிட்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இருதரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்து 05 பில்லியன் டொலர் கடன் வட்டி நிவாரணம் கிடைக்க இருப்பதோடு வர்த்தகக் கடன் வழங்குநர்களின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 03 பில்லியன் டொலர் கடனை வெட்டிவிடப்படவுள்ளது. இதன் ஊடாக நாட்டு மக்களுக்கு 08 பில்லியன் டொலர் நிவாரணம் கிடைக்கின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

20 லட்சம் முழுமையான காணி உறுதிகளை வழங்குவதற்கான 'உறுமய' தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், குருணாகல் மாவட்டத்தில் 73,143 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி நேற்று முற்பகல் குருநாகல் வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் 463 பேருக்கு காணி உறுதிகளை அடையாள ரீதியாக வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"குருணாகல் மாவட்டம் நாட்டிற்கு சோறு தரும் விவசாயிகள் வாழும் பகுதியாகும். ஆனால் இன்னும் அவர்களுக்கான நில உரிமை கிடைக்கவில்லை. இன்று இந்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கானோர் சட்டரீதியான காணி உறுதிகள் இன்றி வாழ்கின்றனர். அவர்களுக்கு உரிமையை வழங்குவதற்காகவே உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம்.

மிகவும் கடினமான காலகட்டதிலேயே என்னால் ஆட்சியமைக்க நேரிட்டது. ஆட்சியைப் பொறுப்பேற்க தலைவர்கள் எவரும் அப்போது முன்வரவில்லை. ஆனாலும் நான் ஏற்றுக் கொண்டேன். பல கட்சிகளை ஒன்றிணைத்துக்கொண்டு ஆட்சியமைத்தேன். தற்போது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது மக்கள் நம்பிக்கை இழந்திருந்தனர். இன்று இந்தப் பகுதி எம்.பி.க்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தமது வீடுகள் தீயிடப்பட்டமையை மறந்துவிட்டு மக்களுக்கு நன்மை செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

இன்று நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது. கடனைத் திருப்பிச் செலுத்த எமக்கு 04 வருட கால அவகாசம் உள்ளது. மேலும், சுமார் 06 வருடங்கள் மிதமான சுமையுடன் கடனை செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும். செலுத்த வேண்டிய வட்டியில் ஒரு தொகை வெட்டி விடப்பட்டுள்ளது. அதனால் 05 பில்லியன் டொலர்கள் நாட்டுக்கு எஞ்சும்.

தற்போது தனியார் ஒப்பந்ததாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதன்படி சுமார் 03 பில்லியன் டொலர்கள் குறைவடையும். எனவே நாம் செலுத்த வேண்டிய பணத்தில் இருந்து மொத்தம் 08 பில்லியன் டொலர்கள் வெட்டிவிடப்படும். மேலும், தளர்வான நிபந்தனைகளின் கீழ் 02 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சீனா, இந்தியாவின் உதவித் தொகைகள் அதற்குள் உள்ளடங்காது. இதன் மூலம் கடந்த இரண்டு வருடங்களில் 08 பில்லியன் டொலர்களை சேமித்துள்ளோம்.

நான் அரசாங்கத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில், இந்தியா எமக்கு மூன்றரை பில்லியன் டொலர்களை இலகு கடன் அடிப்படையில் வழங்கியது. மேலும் பங்களாதேஷும் 200 மில்லியன் டொலர்களை வழங்கியது. பொருளாதார சிக்கல்கள் இருந்தபோதிலும், நாம் 200 மில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்தியுள்ளோம்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நான் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. வற் வரியை அதிகரிப்பது எளிதானது அல்ல. ஆனால் பொருளாதாரத்தை சீரமைக்க அதைச் செய்ய வேண்டியிருந்தது. சில தலைவர்கள் மக்களை

தொடர்ச்சி▼










# கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ் 8 பில்லியன் டொலர் நிவாரணம் கிட்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

வீதிக்கு வந்து வீடுகளை எரிக்கச் சொன்னார்கள். அரசாங்கத்தை ஆதரிக்கக் கூடாது என்றார்கள். விவசாயிகளை மீண்டும் கொழும்புக்கு வருமாறு கூறினர். விவாசாயத்துக்கு தேவையான எரிபொருள் இல்லாமல் கொழும்புக்கு வர முடியாது. மக்களுக்கு எரிபொருள் மற்றும் உரங்களை வழங்கினோம். அப்போதும் கூட விவசாயத்தில் ஈடுபடாமல் விவசாயிகளுக்கு கொழும்புக்கு வருமாறு கூறினர்.

விவசாயிகள் 2022-2023 வரையில் பெற்றுத்தந்த அறுவடையின் காரணமாகவே இந்த நாட்டின் உற்பத்தி அதிகரித்தது. அதே நேரத்தில், சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடைந்தது. இவற்றுக்கு மத்தியில் 08 பில்லியன் டொலர் நிவாரணத்தையும் பெற்றுக் கொண்டு கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியை உருவாக்கியுள்ளோம். பொருளாதார வீழ்ச்சி சாதாரண மக்களையே பெருளவில் பாதிக்கிறது. ஆனால் பொருளாதார வளர்ச்சியின் இலாபத்தை ஒரு தரப்பு மாத்திரம் அனுபவிக்கிறது.

அதனாலேயே உறுமய திட்டத்தின் கீழ் மக்களுக்கு இலவச காணி உறுதிகளை வழங்கி சாதாரண மக்களுக்கும் அதன் பலன்களை பெற்றுக்கொடுக்க விருப்பினோம். பல தலைமுறைகளாக தாம் வாழ்ந்த காணியின் உரிமை இன்று மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தற்போதைய அரசாங்கத்தின் சாதனையாகும்.

மற்றவர்கள் சோசலிசம் பற்றி பேசுகிறார்கள். ஆனால் இதுதான் உண்மையான சோசலிசம். இதன் மூலம் மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படுகிறது. உலகில் இரண்டு நாடுகள் மட்டுமே இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளன. ஜப்பான் மற்றும் தென் கொரியா. ஆனால் இருநாடுகளிலும் குறைந்த விலைக்கு காணி வழங்கப்பட்டன. ஆனால் நாங்கள் இதை இலவசமாக வழங்குகிறோம். இந்த வேலைத்திட்டத்தின் மூலம் இந்நாட்டில் காணி உரிமையாளர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்தினால் அதிகரித்துள்ளது.

அத்துடன் சமூர்த்தி வேலைத்திட்டத்தின் நன்மைகளை மூன்று மடங்கினால் உயர்த்துவதற்காக அஸ்வசும திட்டத்தை செயற்படுத்தினோம். வங்குரோத்து அடைந்த நாட்டிலேயே இந்த திட்டங்களை செயல்படுத்தினோம். அரசாங்க ஊழியர்களுக்கும் கஷ்டங்களுக்கு மத்தியில் 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கினோம்.

எதிர்வரும் வருடங்களிலும் சம்பள அதிகரிப்பு குறித்து கவனம் செலுத்தலாம். இத்தோடு தனியார் துறையிலும் சம்பள உயர்வு கிட்டியது. சுற்றுலா துறையின் வருமானம் அதிகரித்தது. இன்று, நாட்டில் ஒரு நவீன சுற்றுலா வணிகம் உருவாகியுள்ளது. இதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.” – என்றார்.













# நாவலருக்குப் பின் எமது வடக்கைக் காக்க வந்த ஆன்மீகத் தலைவர் மீது காழ்ப்புணர்வுக் குற்றச்சாட்டு

## துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை ஆளுநருக்கு நேற்றுக் கடிதம்

மிகவும் புகழ்பூத்த ஆறுமுகநாவலருக்குப் பின் எமது வடக்கைக் காக்க வந்த ஆன்மீகத் தலைவர் மீது, ஆளுநரா கிய தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் எனத் தெரிவித்து, ஊடகத் தர்மத்துக்கு முரணாக அவரது பெயர் பாவிக்கப்பட்டமையை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காபுரம் துர்க்காதேவி பெண்கள் தொண்டர்சபை நேற்று வடக்கு மாகாண ஆளி நருக்கு "காழ்ப்புணர்வுக் குற்றச்சாட்டு" என்ற தலைப்பில் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆன்மீகப் பணிகளோடு சமூகப் பணிகளையும் தன்னகத்தே கொண்டு பரந்துபட்ட பெரு விருட்சமாக சமூகத்தில் அறப்பணிகள் பலவற்றை ஆற்றி வருகின்றது.

துர்க்காதுரந்தரி சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராக ஆலயத்தில் இருக்கின்ற காலத்தில் இந்த ஆலயம் சமூகமயப் படுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு "எம் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற தாரக மந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை நிறுவனத்தின் தலைவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

அதேபோன்று, தாய், தந்தையரை இழந்து தவிக்கும் பெண்பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு துர்க்காதேவி மகளிர் இல்லம் அன்னை அவர்களால் அவர் அதற்கும் தலைவராக இருந்து உருவாக்கப்பட்டது. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்ற தாய் – தந்தை அற்ற பிள்ளைகளைக் கூட, அவர்களின் முறையான பராமரிப்பிற்கும், நன்னடத்தைக்குமாக யாழ்.மாவட்ட நீதி மன்றங்கள்கூட சிபாரிசு செய்கின்ற இடமாக துர்க்காதேவி மகளிர் இல்லம் காணப்படுகின்றது. அந்தளவுக்கு அதற்கு சமூகத்தில் நற்பெயருண்டு.

யுத்தம் மௌனிக்கப்பட்ட நேரத்தில் தாய், தந்தைகளை இழந்து போர் தந்த வலிகளுடன் வாழவெறுத்து தடுப்பு முகா மில் இருந்த எத்தனையோ பெண்பிள்ளைகளை எமது ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அழைத்து வந்து எமது மகளிர் இல்லத்தில் ஒப்படைத்தார்.

எமது இல்லத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகங்களுக்கு கணிசமான மாணவர்கள் செல்கின்றனர். இந்த இல்லம் அவர்களுக்கு ஓர் அநாதை இல்லம் என்ற சிந்தனை மனதில் எழாதவாறு ஒவ்வொரு விடயங்களையும் அவர்களது கல்வி நடவடிக்கைகளையும் பார்த்துப் பார்த்து ஆற்றுகின்றது. இன்று இந்த இல்லத்தில் இருந்தவர்கள் எத்தனையோ பேர் இல்லற வாழ்வில் தம்மை இணைத்து எமது ஆலயத்தால் அவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் உருவாக் கிக் கொடுக்கப்பட்டு வாழ்கின்றார்கள்.

அன்னை அவர்கள் மரணித்ததன் பிற்பாடு, தலைவராக கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா நியமிக்கப்பட்டதன் பிற் பாடு, அவர் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபைக்கு செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி ஆகிய என்னையும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி சிவமலர் அனந்த சயனன் அவர்களையும் நியமித்தார். முழுப் பொறுப்புக் களையும் எம்மிடமே ஒப்படைத்தார்.

ஆலயத்தினதும் நிர்வாகசபை மற்றும் தர்மகர்த்தா சபை என்பவற்றின் தலைவராக அவர் உள்ளமையால் நாம், அவரை போசகராகவே நியமித்தோம். ஆனால், வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற ஊடகமாகிய உதயனில், தாங்கள் உத்தரவிட்டதாகத் தெரிவித்து "ஆறு.திருமுருக னால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் இழுத்து மூடல்" என பிரதான தலைப்பிட்டு செய்தி வெளியிடப்பட்டமையைக் கண்டு அதிர்ச்சியுற்றோம். முதலில் இந்த மகளிர் இல்லத் துக்கு அவர் வெறும் போசகர் மட்டுமே. அத்துடன் இது அவருடைய இல்லம் என்றாற்போல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அன்னை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியால் உருவாக்கப்பட்டு, அதற்கொரு தலைவர் நியமிக்கப்பட்டு, நிர்வாக சபை, தர்மகர்த்தா சபை போன் றவற்றின் கண்காணிப்பின் கீழ் 40 வருடங்களுக்கு மேலா கச் செயற்படுகின்ற ஓர் அமைப்பு. இந்த அமைப்பின் மீது இதுவரை இல்லாத அளவுக்கு காழ்ப்புணர்வு காரணமாக இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மிகவும் புகழ்பூத்த ஆறுமுகநாவலருக்குப் பின் எமது வடக்கைக் காக்கவந்த ஆன்மீகத் தலைவர் மீது, ஆளுநர் ஆகிய தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் எனத் தெரிவித்து, ஊடகத் தர்மத்துக்கு முரணாக அவரது பெயர் பாவிக்கப்பட்டமையை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது கண்டனத்தை வெளிப்படுத்தி துர்க்காபுரம் பெண் கள் தொண்டர் சபையினராகிய நாம் எமது ஒப்பங்களை இட்டு இந்தக் கண்டன அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம். – என்று உள்ளது.

# 'உதயன்' நாளிதழிடம் ரூ.30 கோடி நஷ்டஈடு கோரி ஆறு.திருமுகனின் சட்டத்தரணி நிபந்தனைக் கடிதம்

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலய முகா மைத்துவ சபையின் தலைவர் கலாநிதி

ஆறு. திருமுருகனின் நற்பெயருக்கு இழுக்கேற்படுத்தும் தீய நோக்கத்துடனும் இழிவுபடுத்தும் தன்மையுடனும் வெளியிடப்பட்ட முற்றிலும் பொய்யான செய்தி தொடர்பில் 30 கோடி ரூபா நஷ்ட ஈடு செலுத்தும்படி கோரி அவரின் சட்டத்தரணி "உதயன்" பத்திரிகைக்கு நேற்று நிபந்தனைக் கடிதம் அனுப்பியிருக்கின்றார்

யாழ்ப்பாணம் நியூ உதயன் பப்ளிக்கேசன் பிறைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் அதன் பணிப்பாளர்களான ஈஸ்வரபாதம் சரவணபவன், யசோதை சரவணபவன், லக்ஷ்மி சரவணபவன் ஆகிய தரப்பினருக்கே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:–

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி அம்மன் ஆலய முகா மைத்துவ சபையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் அறிவுறுத்தலில் எழுதும் கேள்விக் கடிதமாவது:

04.07.2024 அன்று தங்களது நிறுவனத்தினால் பிரசுரிக் கப்படும் உதயன் நாளிதழின் முன்பக்கத்தில் "மாணவி கள் குளிக்கும் வீடியோக்கள் பதிவு! ஆறு.திருமுருகனால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் இழுத்துமூடல்!"எனும் தலைப் பில் செய்தியொன்று தலைப்புச் செய்தியாக பிரசுரிக்கப் பட்டிருந்தது. குறித்த செய்தி பிரசுரிக்கப்பட்ட 04.07.2024 இற்கு முன்பதாக அவ்வாறான எந்தவொரு உத்தரவும் வடமாகாண கௌரவ ஆளுனரினால் வழங்கப்பட்டிருக்க வில்லை. மேலும் மாணவிகள் குளிக்கும் வீடியோக்கள் பதிவு எனும் முற்றிலும் பொய்யான விடயம் குறித்த செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்படி முகவரியில் தங்கள் நிறுவனம் அமைந்துள்ள ஆதனமானது எனது கட்சிக்காரர் தலைவராகக் கடமையாற்றும் சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையளிக்கப்பட்டு விட்டது என்பதாலும் குறித்த ஆதனத்திலிருந்து தங்களை வெளி யேற்ற எனது கட்சிக்காரர் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்பதனாலும் அவர் மீதுள்ள குரோதத்தின் காரணமாக குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளதென எனது கட்சிக் காரர் கருதுகின்றார்.

எனது கட்சிக்காரர் கடந்த இரு தசாப்த காலத்தில் தனது நாவன்மையின் மூலம் சேகரித்த நிதியைக் கொண்டு பல்வேறு சமய சமூகப் பணிகளை செய்து வருவதோடு ஈழ சைவ சமயிகளினுடைய குறிப்பிடத்தக்க தலைவராகவும் இருந்து வருகின்றார். தங்களது பத்திரிகையில் வெளியிடப்பட்ட முற்றி லும் பொய்யான செய்தியானது பொதுப்பணிகளில் ஈடுபட்டு வரும் எனது கட்சிக்காரரை இழிவுபடுத்தும் தன்மையானது என்பதோடு அவரது நற்பெயருக்கு இழுக்கேற்படுத்தும் தீய நோக்கம் கொண்டதுமாகும்.

எனவே இக் கடிதம் கிடைத்து 48 மணித்தியாலத்திற்குள் தங்களால் பிரசுரிக்கப்படும் உதயன் நாளிதழில் 04.07.2024 அன்று வெளிவந்த செய்திக்கு நிகரான வடிவத்தில் எனது கட்சிக்காரரிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்ப தோடு இக் கடிதம் கிடைத்து 14 நாள்களுக்குள் ரூபா 300 மில்லியனை நட்டாடாகச் செலுத்த வேண்டும் எனவும் எனது கட்சிக்காரர் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேற்குறித்த விடயங்களை உரிய காலத்தில் செய்யத் தவறுமிடத்து தங்களுக்கு எதிராக பொருத்தமான நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென இத்தால் தங்களுக்கு அறிவித்தல் வழங்கப்படுகின்றது. – என்று உள்ளது.





# மூதூரில் காணாமல்போன இளம் பெண் கிணற்றிலிருந்து நேற்று சடலமாக மீட்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து காணாமல்போயிருந்தார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நடேஸ்குமார் வினோதினி என்ற 25 வயதான பெண்ணினுடையது எனச் சந்தேகிக்கப்படும் சடலமும், அவரது கைப்பையும் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மூதூர் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கமைய முறைப்பாட்டை விசாரித்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான கிணற்றை மூதூர் நீதிமன்ற நீதிவான் திருமதி எச்.எம். தஸ்னீம் பௌசான், திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டோர் முன்னிலையில் நேற்று தோண்டியபோதே, பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி என்ற திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான, கணவரால் கைவிடப்பட்டிருந்த 25 வயதான பெண் காணாமல்போயிருந்தமை தொடர்பில், அவரது குடும்பத்தினரால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் இந்த மாதம் முதலாம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பெண்ணின் காதலன் தற்போது தலைமறைவாகியுள்ளார். இவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது. இதேவேளை, இவரின் குடும்பத்தவர்களும் தலைமறைவாகியுள்ளன என்று அறியமுடிகின்றது.

தற்போது சடலம் கண்டெடுக்கப்பட்ட கிணறு உள்ள காணி உரிமையாளர், கிணற்றில் சடலத்தை மறைக்க உதவிய கனரக வாகன சாரதி, குப்பைகளைக் கிணற்றில் இட்டு அதனை மூடியவர் ஆகிய மூவரையும் கைது செய்யுமாறு மூதூர் நீதிவான் உத்தரவிட்டு, வழக்கை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.




## இலங்கை - இந்திய மீனவர் விவகாரத்தில்

# தமிழ்க் கட்சிகள் ஏன் மௌனம்?

## யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை – இந்திய மீனவர் விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் ஏன் மௌனம் காத்து வருகின்றனர் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்த நிலையில் பகிரங்கமாகவே மீனவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தனர்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்களால் இங்குள்ள மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களைத் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வருகின்றனர்.

எமது வாழ்வாதாரம் தொடர்ந்தும் இழக்கப்படுவதுடன் வளங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆகையினால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், அடாவடிகளை நிறுத்த வேண்டும் என்று இலங்கை, இந்திய அரசுகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

ஆனாலும், எந்தவித நடவடிக்கையும் இரண்டு நாடுகளுமே எடுக்கவில்லை. இதனால் தெடர்ந்தும் நாங்கள் பாதிப்படைந்து வருவதால் பல்வேறு போராட்டங்களையும் நடத்தியிருக்கின்றோம்.

இந்த விடயம் குறித்து பல தரப்பினர்களிடத்தேயும் தெரியப்படுத்தி இருந்தபோதும் இதுவரையில் எந்தவொரு தீர்வும் எமக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் மீனவர் விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளிடத்தே அக்கறையில்லாத நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக அத்துமீறி அடாவடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களின் விவகாரம் தொடர்பில் பேசுவதற்குத் தமிழ்த் தரப்பினர் இப்போது தயங்குகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் குரல் கொடுக்காது ஏன் மௌனம் காத்து வருகின்றனர். அதிலும் அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்தபோதும் கூட மீனவர் விவகாரம் தொடர்பாகத் தமிழ்த் தரப்பினர்கள் பேசவில்லை எனவும் தமது ஆதங்கத்தையும் எதிர்ப்பையும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

# மட்டு. விமான நிலையம் அருகில் புதைக்கப்பட்டிருந்த 12 கண்ணிவெடிகள் அகற்றி வெடிக்க வைக்கப்பட்டன

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு விமான நிலையத்தின் எல்லையான திருப்பெரும்துறை பகுதியில் 12 நிலக் கண்ணிவெடிகளை கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிலச்சுரங்க ஆய்வு குழுவான (எம்.ஏ.ஜி) அமைப்பினர் மீட்டெடுத்து நீதிமன்ற அனுமதியுடன் இராணுவத்தினர் அதனை நேற்று வெள்ளிக்கிழமை வெடிக்க வைத்துச் செயலிழக்கச் செய்தனர்.

யுத்தகாலத்தில் திருப்பெரும்துறை வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட விமானப்படை முகாமைச் சுற்றி அந்த பகுதியில் ஏராளமான கண்ணிவெடிகள் நிலத்தில் புதைத்திருந்தனர்.

இந்த நிலையில் அங்கிருந்து விமானப்படை முகாம் மூடப்பட்டு படையினர் வெளியேறிய போதும் நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருந்துள்ளன. அவற்றை அகற்றுமாறு படையினர் எம்.ஏ.ஜி. கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திடம் கோரியமையையடுத்து, அந்தப் பகுதியை அவர்கள் அடையாளமிட்டு கண்ணிவெடிகளை தேடிச் சோதனையிடும் நடவடிக்கையைப் புதன்கிழமை ஆரம்பித்தனர்.

இதன் போது அந்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 12 கண்ணிவெடிகளை கண்டுபிடித்து மீட்கப்பட்டன. இதனை உடனடியாக செயலிழக்க வேண்டியதையடுத்து நீதிமன்ற அனுமதியை பெற்று மின்னேரியாவிலுள்ள குண்டுகளை செயலிழக்கும் இராணுவப் பிரிவினரை வரவழைத்து அதனை வெடிக்கவைத்து செயலிழக்க செய்தனர்.

இதேவேளை குறித்த பகுதியில் மக்கள் குடியேறி வசித்துவருகின்றனர். தொடர்ந்தும் கண்ணிவெடிகள் உள்ள பகுதிகள் அடையாளமிடப்பட்டு சோதனை நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றன. புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளில் மனிதர்களோ, மிருகங்களோ இன்று வரை அகப்படாமல் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மட்டக்களப்பிற்கு நேற்று விஜயம்







(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனுக்கும் இலங்கைக்கான உலக உணவுத் திட்ட வதிவிடப் பணிப்பாளர் அப்துல் ரகீம் சித்திக்கிற்கும் இடையிலான விசேட சந்திப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உலக உணவு திட்ட நிறுவனம் அரசாங்கத்துடன் இணைந்து பல செயற்றிட்டங்களை மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக பாடசாலை மாணவர்களுக்குப் போசாக்கான உணவை வழங்குவதற்காக வீட்டுத் தோட்டம் மற்றும் கோழி வளர்ப்பு திட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தை மேலும் நான்கு கல்வி வலயங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான கோரிக்கை இதன்போது விடுக்கப்பட்டது.

அத்தோடு மாவட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், காலநிலை மாற்றத்தில் தாங்குதிறன் தன்மைத் திட்டங்களை செயற்படுத்துமாறும் அரசாங்க அதிபரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்துடன் அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான செயற்திட்டங்களை ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்துமாறு அதிபரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசாங்க கூட்டாண்மை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர்.ஜதிஸ்குமார், வி.நவநீதன், உலக உணவுத் திட்ட உயர் அதிகாரிகள், உலக உணவுத் திட்டத்தின் நிகழ்ச்சி திட்ட உதவியாளர் திருமதி.ரஜனி கேதீஸ்வரன் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# புதுடெல்லிக்கு வருமாறு டக்ளஸுக்கு ஜெயசங்கர் அழைப்பு விடுத்துள்ளார்!

## யாழ். மாவட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவல்













புதுடெல்லிக்கு வருமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெயசங்கரினால் தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடைப்பட்டு இருக்கின்ற இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்களை மீண்டும் முன்னெடுத்து, இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தைத் தீர்ப்பதற்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட போது, இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடு காரணமாக பாதிக்கப்படும் தங்களுடைய வாழ்வாதாரம் தொடர்பாக போதிய கரிசனை வெளிப்படுத்தப்படுவதில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்த போது கூட தமிழ் மக்களின் பிரதிநிதிகளினால் கடற்றொழிலாளர் விவகாரம் பேசப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையிலேயே தனக்கும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் கடற்றொழிலாளர் விவகாரம் விரிவாக பேசப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தில் காணப்படும் போதைப் பொருள் பரவல் மற்றும் சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்தல், வீதி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களை ஆராய்ந்து சரியானவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, சட்டத்திற்கு முரணான வகையில் சுண்ணக்கல் அகழப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனினால் முன்வைக்கப்பட்ட குற்றசாட்டுக்களில் உண்மை இல்லை என்பதை கள விஜயங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்ணக்கல் அகழ்வு என்பது ஆயிரக்கணக்கானோரின் வாழ்வாதாரமாக இருக்கின்ற நிலையில், உரிய நியமங்களின் அடிப்படையில் சுண்ணக்கல் அகழ்வினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, அகழப்படுகின்ற சுண்ணக்கல், வர்த்தக நோக்கோடு வெளி மாவட்டங்களுக்கு சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுகின்ற பட்சத்தில் அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கான பொறிமுறையை, சட்ட ஏற்பாடுகளை விரிவாக ஆராய்ந்து ஆதற்கேற்ப உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்தில், மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மற்றும் மாகாண திணைக்களங்களின் பிரதானிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விஜயம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தலைமையிலான குழுவினர் விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

பொதுமக்கள் தமக்கான சேவைகளை பெற்றுகொள்வதில் இடர்பாடுகளை சந்திப்பதாக அலுவலகத்துக்கு கிடைத்த தொலைபேசி முறைப்பாடுகளுக்கு அமைய அக்களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது என தங்கவேல் கனகராஜ் தெரிவித்தார்.

குறிப்பாக சமூக பொருளாதார சமூக உரிமைகளில் ஒன்றான சுகாதார உரிமைகளை மக்கள் அனுபவிப்பதை, அணுகுவதை உறுதி செய்யுமுகமாக இந்தக் கள விஜயம் அமைந்திருந்தது.

குறிப்பாக இன்றையதினம் (நேற்று) விடுதிகளில் நோயாளர்கள் எவரும் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கவில்லை என்பது தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் எம்மால் இந்தக் களவிஜயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பல அவதானிப்புகள் தொடர்பில் எதிர்வரும் 08 ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சர் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற கிஷோர் கைதாகிப் பின் பிணையில்!










சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் நேற்றைய தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றமைக்காக சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குப் புதிதாக வைத்திய அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் நோயாளிகளின் நலன் கருதி சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் காரணமாக வைத்தியசாலை அத்தியட்சகருக்கும் வைத்தியசாலையில் பணிபுரிகின்ற வைத்தியர்களுக்கும் முரண்பாடுகள் தோன்றி இருந்தன.

இதனையடுத்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பணிபுரியும் வைத்தியர்கள் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நேற்றைய தினமும் இன்றைய தினமும் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லுகின்ற நோயாளிகள் அனைவரும் திருப்பி அனுப்பப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் தென்மராட்சியின் பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நேற்று முற்பகல் வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த மாகாண சுகாதாரப் பணிப்பாளரைச் சந்தித்து நிர்வாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்னர் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும், இல்லையேல் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாரிய போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவிப்பதற்காக வைத்தியசாலை முன்பாக குழுமி இருந்தனர்.

இதனையடுத்து அங்கு வருகைதந்த சாவகச்சேரிப் பொலிஸார் வைத்திய சாலை முன்பாக குழுமி இருந்தவர்களை அகற்ற முற்பட்டனர்.

இதன்போது ‘அமைதியான முறையில் நாங்கள் மாகாண சுகாதார பணிப்பாளரை சந்தித்து சிகிச்சை நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கக் கோரிக்கை முன்வைக்கவே எந்தவித இடையூறுகளும் செய்யாமல் இருக்கின்றோம். ஆகவே எம்மை கலைந்து செல்லுமாறு கூற முடியாது’ என்று தெரிவித்த முன்னாள் நகரசபை உறுப்பினர் கிஷோரை அங்கிருந்த சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

இதனை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ்க்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு உடனடியாக விரைந்த இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் பொதுமக்களோடும் வைத்தியசாலை நிர்வாகத்தோடும் கலந்துரையாடினார். உடனடியாகவே சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கைது செய்யப்பட்ட முன்னாள் நகர சபை உறுப்பினரையும் பார்வையிட்டார்.

இதனை அடுத்து சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் விடுதிகளில் தங்கி இருந்து சிச்சை பெற்றவர்கள் அனைவரும் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டமையோடு வீடுகளுக்கும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் வைத்தியசாலை வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றது.



# தமிழரசு நல்லூர்க் கிளை சம்பந்தனுக்கு அஞ்சலி

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக் கிளை நேற்று அஞ்சலி செலுத்தியது.

இந்த நிகழ்வு நல்லூர் தொகுதி கிளையின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

நல்லூர் தொகுதி கிளை பணிமனையில் நடந்த இந்நிகழ்வில் நினைவுச்சுடரை நல்லூர் தொகுதி கிளையின் செயலாளர் இ. இராஜதேவன் ஏற்றி வைத்தார்.

இரா. சம்பந்தனின் திருவுருவ படத்துக்கு சீ. வீ. கே. சிவஞானம், இராஜதேவன் இணைந்து மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்றவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

















# இலக்கியவாதி,எழுத்தாளர் முத்துமீரான் காலமானார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



நிந்தவூரைச் சேர்ந்த நாடறிந்த எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், உருவகக் கதை எழுத்தாளர், நூலாசிரியர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். முத்துமீரான் காலமானார்.

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட உருவகக் கதைகளை எழுதியுள்ளார். இவருடைய முதற் தொகுதியான "உருவகக் கதைகள்" நூல் தென்னிந்தியா கூத்தா நல்லூர் தென்றல் மன்றத்தினால் 25.02.1982ஆம் ஆண்டு கவிஞர் திலகம் சாரணபாஸ்கரனால் வெளியிடப்பட்டது.

இவர் இருநூற்றுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும், பல நூறு கவிதைகளையும் எழுதியுள்ளார்.

அத்தோடு இவர் நாட்டார் இலக்கியங்களை ஆய்வு செய்து நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

அரசியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இவர் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு வந்த நிலையிலேயே சட்டக் கல்லூரி பரீட்சையில் சித்தியடைந்து சட்டத்துறையில் கற்றலை மேற்கொண்டு சட்டத்தரணியாகத் தொழில் புரிந்தார்.

இவர் நிந்தவூர் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவராகவும் ஊருக்கு சேவையாற்றியுள்ளார்.

இவர் நிந்தவூர் மண்ணுக்கு பெரும் புகழை இலக்கியத்துறையில் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இலங்கையில் மட்டுமன்றி இந்தியா – தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள், அரசியல்வாதிகளுடன், இலக்கிய வாதிகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டவர். தமிழ் நாட்டில் நடைபெற்ற தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு தமிழ் மொழி மற்றும் இலக்கிய ஆய்வுகளை அவர் முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் பிராந்திய புதிய எஸ்.எஸ்.பி. நேற்றுப் பதவிப் பொறுப்பேற்றார்




யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்திற்கான புதிய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார நேற்று உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் சர்வமத தலைவர்களின் ஆசியுடன் நடைபெற்ற நிகழ்வில் புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



இதுவரை யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சராக கடமையாற்றிய ஜகத் விசாந்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றமையால் அவருடைய பதவி நிலைக்கு சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலைப் பிற்போட்டால் மீண்டும் களேபரம் ஏற்படும்

## சித்தார்த்தன் எச்சரிக்கை



தேசிய அரசாங்கம் என்பது அரசுத் தரப்பினர் தங்களைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்வதற்காகவே கொண்டு வரப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் அத்தகைய தேசிய அரசாங்கத்தில் ஒருபோதும் தாம் இணையப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட்டால் நாட்டில் மீண்டும் களேபரம் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் பேசப்பட்டு வருகிற நிலையில் அவ்வாறான தேசிய அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்புக்கள் ஏதும் வந்திருக்கிறதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் இப்போது ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவிருக்கிறது. இவ்வாறான நிலையில் தேசிய அரசாங்கம் பற்றி இப்போது ஏன் பேசப்படுகிறது என்று எனக்கு தெரியவில்லை.

அடுத்ததாக இந்த தேசிய அரசாங்கத்தில் இணையுமாறு எங்களுக்கு அழைப்பு வந்தாலும் அந்த தேசிய அரசாங்கத்தில் ஓர் அங்கமாக நிச்சயமாக நாங்கள் இருக்க மாட்டோம்.

எங்களைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஒட்டி நாம் கோரிக்கைகளை முன்வைக்கிற போது நிச்சயமாக அவர்கள் எதனையும் செய்யப் போவதில்லை.

அது மாத்திரமல்லாமல், தேசிய அரசாங்கமென்பது தங்களைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்வதற்கு உருவாக்குகின்ற ஒரு விடயமாகவே அமைகிறது.

அது யாராக இருந்தாலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந்த விடயத்தை எடுத்துக் கொள்வார்கள் என்பதால் அதற்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அதில் நாங்கள் இணையப் போவதும் இல்லை.

மேலும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. ஆனாலும் ஏதேனும் காரணங்களைக் கூறி பிற்போடுவதற்கு முயற்சித்தால் அது மிகப் பெரிய கலவரத்தையே உண்டுபண்ண வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக தென்னிலங்கையை பொறுத்தமட்டில் அறகலய போன்ற போராட்டகாரர்கள் மீண்டும் உருவாகிப் போராட்டங்ளே ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் நேற்று நான்காவது நாளாக வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வேலையில்லாப் பட்டதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வங்குமாறு கோரி நான்காவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமை தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த 2 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகள் காந்திபூங்காலில் அரச நியமனம் கோரி ஆர்ப்பாட்ட போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் கலந்துகொண்டு "பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்து எம்மை ஏமாற்றாதே!", "கிழக்கு மாகாணப் பட்டதாரிகளை புறக்கணிக்காதே!", "பட்டதாரிகள் வீதியில் நின்றால் நாடு முன்னேறுவது எப்படி?", "எமது வாழ்கையை நாம் எப்போது வாழ்வது?", "பல்கலைக்கழகப் பட்டத்தை முடித்து வீதியில் நிற்கவா?" – போன்ற சுலோகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியபடி நேற்று நான்காவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை இந்த போராட்டத்தின் இரண்டாம் நாள், போராட்ட இடத்துக்கு எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சென்று போராட்டகாரர்களின் கோரிக்கையை கேட்டறிந்து நாடாளுமன்றத்தில் அது குறித்துப் பேசுவார் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டு. நகரில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நாட்டப்பட்ட பாரிய மரத்துக்கு விசமிகள் தீ வைப்பு; மக்கள் கடும் விசனம்







(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற கட்டிடத்திற்கு முன்னாள் உள்ள - பிரித்தானியர் ஆட்சி காலத்தில் நாட்டப்பட்ட- 120 வருடத்துக்கு முந்திய பாரிய வாகை மரத்தின் அடியின் கீழ் விசமிகள் தீ வைத்துள்ளனர் எனப் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடத்துக்கு முன்னாலும் பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்துக்கும் முன்னால் வீதியில் சுமார் பிரித்தானியர் ஆட்சிகாலத்தில் நடப்பட்ட வாகை மரம் இன்று சுமார் 120 வருடங்களுக்கு மேலாக தளைத்தோங்கி 10 அடி சுற்றளவைக் கொண்டு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

இந்த நிலையில் அந்த வீதியில் பல பாரிய மரங்கள் வளர்ந்து வருகின்றமையுடன் அந்த மரங்களின் நிழலின் கீழ் பலர் சென்று களைப்பாறி வருவது வழமை. அந்தப் பகுதி மிகவும் ஒரு சோலைவனமாக இருந்து வருகின்றது.


இவ்வாறாக இருக்கும் இந்த மரத்தை பட்டுப் போக வைத்தது அழித்தொழிக்கும் நடவடிக்கையாகவே சில விசமிகள் திட்டமிட்டு மரத்திற்கு தீவைத்துள்ளனர் என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

இந்த மரம் மட்டு மாநகர சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. இதனை மாநகரசபை கவனிக்குமா? சுற்றுச் சூழல் அதிகாரிகள் கவனிப்பார்களா? மரத்தை பாதுகாப்பார்களா? எது, எவ்விதமாக இருந்தாலும் இந்த மரத்துக்குத் தீவைத்து அழித்தொழிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்தி இதனைப் பாதுகாக்க அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர்.

# போதைப்பொருள் கடத்தல்காரர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்

பிலியந்தலையில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் போதைபொருள் கடத்தல்காரர் என்று கருதப்படும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சந்தேகநபர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் இரவு 10.30 அளவில் இந்தச் சந்தேகநபர் பயணித்த காரை பொலிஸார் இடைமறித்துள்ளனர்.

இதன்போது தப்பிச்செல்ல முற்பட்ட சந்தேகநபர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேகநபர் நீண்ட நாள்களாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.



# சு.க. தலைமையகத்திற்கு வெளியில் செயலராகப் பதவியேற்றார் தயாசிறி

நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து பொதுச்செயலாளராக கடமையேற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, கொழும்பு டார்லி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்குச் சென்றமையையடுத்து அங்கு நேற்று முற்பகல் அமைதியின்மை ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குள் பிரவேசிக்க முடியாதவாறு பிரதான வாயிலியில் பூட்டுப் போடப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

தயாசிறி ஜயசேகரவுடன் இருந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் தயாசிறி ஜயசேகர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு வெளியில் ஆவணமொன்றில் கையெழுத்திட்டு பொதுச்செயலாளராக கடமையேற்றார் எனக் கூறப்பட்டது.

தயாசிறி ஜயசேகரவை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான விசாரணை நிறைவுபெறும் வரை இந்த இடைக்கால தடையுத்தரவு அமுலில் இருக்கும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் தயாசிறி ஜயசேகர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

எவ்வாறாயினும், தயாசிறி ஜயசேகரவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இப்போது கட்சியின் பொதுச் செயலாளர் என உரிமை கோரும் துமிந்த திஸாநாயக்க கடந்த புதன்கிழமை தெரிவித்திருந்தார்.

# கெஹெலியவின் குடும்பத்தவர்களினது வங்கிக் கணக்குகளை முடக்க உத்தரவு



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்பத்தினரின் தனியார் வங்கிக் கணக்குகள் சிலவற்றை 03 மாதங்களுக்கு முடக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

காப்புறுதி பத்திரங்கள் சிலவும் முடக்கப்பட்ட சொத்துக்களில் அடங்குகின்றன. இவற்றின் பெறுமதி 97 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.07.2024

## மேஷம்

உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

## ரிஷபம்

பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.

## மிதுனம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கடகம்

இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்

தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.07.2024




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும்.




நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.




உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

